# இடர் முகாமைத்துவ நிலையம்

# வருடாந்த அறிக்கையும் கணக்கறிக்கையும்

# 2005

# <u>உள்ளடக்கம்</u>


| | | | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| பிரிவு 1 | அறிமுகம் | | 1 - 4 |
| பிரிவு 2 | 2.1 | இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் தொடர்பான சிறுகுறிப்பு | 5 |
| | 2.2 | இடர் முகாமைத்துவ நிலையத்தின் தேசிய மன்றம் | 6 |
| பிரிவு 3 | பணிப்பாளர் நாயகத்தின் முன்னேற்ற அறிக்கை | | 7 - 10 |
| பிரிவு 4 | கணக்கறிக்கை | | 11 - 19 |
| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | | 20 - 28 |

பிரவு 1

# 1 அறிமுகம்

2005 ஜீலை மாதம் 13ம் திகதியில் அமுலுக்குவந்த, 2005ம் ஆண்டின் 13ம் இலக்க பேரழிவுச் செயலாட்சிச் சட்டம் நாட்டில் இடர் முகாமைத்துவத்திற்கான சட்டரீதியான கட்டமைப்பை வழங்குகின்றது. இடர் முகாமத்துவத்திற்கான தேசிய மன்றம் உயர் மட்ட அமைச்சர்களை உள்ளடக்கியுள்ளது. அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இதன் தலைவராகவும் கௌரவ பிரதம மந்திரி அவர்கள் இதன் உப தலைவராகவும் செயலாற்றுகின்றார்கள். தெரிவு செய்யப்பட்ட 20 அமைச்சுக்களுக்கு பொறுப்பான அமைச்சர்களும், மாகாணசபைகளின் பிரதம அமைச்சர்கள், எதிர்கட்சியின் ஐந்து அங்கத்தவர்கள் இதன் ஏனைய உருப்பினர்களாக இருப்பார்கள். இயற்கை மற்றும் ஏனைய அனர்த்தங்களுக்கான திட்டமிடல், ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றுமை நடைமுறைப்படுத்தல்கள் தொடர்பான பிரதான நிலையமான, இடர் முகாமைத்துவத் தேசிய மன்றத்தின் கீழ் செயற்படும் இடர் முகாமைத்துவ நிலையத்தை உருவாக்குவதற்கும் இச்சட்டம் காரணியாய் அமைந்தது. மேற்குறிப்பிட்ட சட்ட மூலத்திற்கமைய இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதான செயற்பாடுகளாவன. ( i) தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்தை மற்றும் தேசிய அவசரகால நடவடிக்கை திட்டத்தை தயாரிப்பதற்கும், தேவையான போது அவற்றை புதுப்பிப்பதற்கும் தேசிய மன்றத்திற்கு உதவியளித்தல். (ii) தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்தை மற்றும் தேசிய அவசரகால நடவடிக்கை திட்டத்தை அமுல்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்று செயற்படல், இடரொன்றிற்கான அவசர நிலைமை அமுல்படுத்தப்படும் போது தேசிய அவசரகால நடவடிக்கை திட்டத்தை அமுல்படுத்துவதற்கான வழிநடாத்தல் மற்றும் ஒருங்கிணைப்பை மேற்கொள்தல். (iii) அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்கள் மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்றவிதத்தில் அமைவதை உறுதிப்படுத்தல். (iv) பிரிவு 10 ற்கமைய உருவாக்கப்பட்ட, அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்கள் மட்டத்திலான பல்வேறு அனர்த்த முகாமைத்துவ திட்டங்களினடிப்படையில், இடர் முன்னாயத்தம், இடர் குறைப்பு, இடர் தடுப்பு, நிவாரணம், புனர்வாழ்வு மறறும் புனர்நிர்மானத் திட்டங்களை உருவாக்குதலும் அமுல்படுத்துதலும். இவ்வாறான திகழ்ச்சிகளையும் திட்டங்களையும் அமுல்படுத்தும் நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தலும, இப்படியான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அவசியமான நிதியை திரைசேரியிலிருந்து பெற்று அவற்றை உரிய பகுதிகளுக்கு வழங்கி அதனை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்தல், (v) உரிய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு இடர் முகாமைத்துவம் தொடர்பான

ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதலும், இந்நிறுவனங்களுடனும் செயலகங்களுடனும் இப்படியான இடர் முகாமைத்துவ வேலைகளை துவங்குதலும் நடைமுறைப்படுத்தலும். (vi) இடர் முகாமைத்துவம் தொடர்பான ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் இடர் முகாமைத்துவம் தொடர்பான தகவல்களை சேகரித்துப் பராமரித்தல். (vii) தமது செயற்பாடுகள் தொடர்பாக தேசிய மன்றத்தினால் வேண்டப்படுமிடத்து காலத்திற்குக் காலம் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

இடர் முகாமைத்துவம் என்பது பரந்ததொரு விடயப்பரப்பாக அமைவதால், இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றத்தில் எல்லா மாகாண ஆளுனர்களும் அங்கத்தவர்களாக உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை 13ம் இலக்க திருத்தச் சட்ட மூலத்திற்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கையில் இடர் அபாய முகாமைத்துவத்திற்கான கட்டமைப்பை இச்சட்ட மூலம் வழங்குவதோடு, இடர் முகாமைத்துவத்தை பலகோணங்களில் நோக்குவதனால் நிவாரணம் வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட அனுகுமுறையிலிருந்து, இடர் முகாமைத்துவத்திற்கான முன்னரே நடவடிக்கை எடுக்கும் அனுகுமுறைக்கான கொள்கை மாற்றத்தை ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது.

சட்ட மூலத்திற்கமைய, இடர் முகாமைத்துவத்தில் பின்வரும் இடரபாயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

- வெள்ளப்பெருக்கு
- மண்சரிவு
- தொழிற்சாலை இடரபாயங்கள்
- சுனாமி (ஆழிப்பேரலை)
- நில நடுக்கம்
- ஆகாய இடரபாயங்கள்
- தீ
- தொற்றுக்கள்
- வெடிப்புக்கள்
- ஆகாயத் தாக்குதல்கள்
- சிவில் மற்றும் உள்ளூர் கலவரங்கள்
- இரசாயன விபத்துக்கள்

- கதிர்வீச்சு அபாய நிலைமைகள்
- எண்ணெய் கசிவுகள்
- அணு இடர்கள்
- நகர மற்றும் காட்டுத் தீ
- கடலரிப்பு
- சுழற்காற்று (டோர்னார்டோ), மின்னல் தாக்கம், மற்றும் கடுமையான இடி

அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கீழ் இயங்கிய இடர் முகாமைத்தவத்திற்கான தேசிய மன்றத்தின் கீழ் 2005 ஆகஸ்ட் மாதத்தில் இடர் முகாமைத்துவ நிலையம் உருவாக்கப்பட்டது.

இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றத்தின் முதலாவது கூட்டம் 2005 ஒக்தோபர் மாதம் 12ம் திகதி இடம்பெற்ற போது, இடர் முகாமைத்துவ நிலையத்தை ஆரம்பிப்தற்கான அனுமதி, நிலையத்தின் கட்டமைப்பு, இடர் முகாமைத்துவ நிலையத்தின் உடனடி செயற்பாட்டிற்காக பணிப்பாளர் நாயகத்தையும், ஏனைய ஊழியர்களையும் பதவியமர்த்தல், அவர்களின் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், 2005ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, 2006ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, இடர் முகாமைத்துவ நிலையத்தின் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம், ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கான 2006ம் ஆண்டிற்கான செயற்திட்டம் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டன.

2005 டிசம்பர் மாதத்தில் இடர் முகாமைத்துவத்திற்கென தனியான அமைச்சொன்று கௌரவ பிரதம மந்திரி அவர்களின் கீழ் உருவாக்கப்பட்டது. 2005 பெப்ரவரி மாதத்தில், மனித உரிமையையும் தனது விடயப்பரப்பில் உள்ளடக்கிய இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சு உருவாக்கப்பட்டது. வர்த்தமாணி அறிவித்தலின் படி இடர் முகாமைத்துவ நிலையத்தின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் பின்வருவனவாகும்.

1. இடர் குறைப்பு, பதில்நடவடிக்கை மற்றும் மீள் நிர்மாணம் என்பவற்றிற்கான வெளிநாட்டு நிதியினால் செயற்படும் திட்டங்களை ஆரம்பித்தலும் அவற்றை ஒருங்கிணைப்புச் செய்தலும்.
2. அவசியமான கடமைகளை மேற்கொள்வதற்காக, அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், தனியார்துறை நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள். சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய தகுதியான நிறுவனங்களுடன் தொடர்புகளை பேணுதல்.

3. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
4. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்கள் தொடரபான அறிவூட்டற் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்
5. முன்னறிவிப்புத் தொகுதி
6. இடர் முகாமைத்துவம், நிவாரண உதவிகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்கயையும் சமூக நலன்புரி நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்.
7. இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்கயையும் சமூக நலன்புரி நிறுவனங்களையும் வழிநடாத்துதல் மற்றும் அவற்றிற்கு உதவியளித்தல்.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஆரம்பிப்புடன், சுனாமி பாதிப்புக்குள்ளான 9 மாவட்டங்களில் கரையோர மக்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலில் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பாளர், உதவி இணைப்பாளர் மற்றும் சராசரியாக 20 இடர் முகாமைத்துவ உதவியாளர்களுடன், மாவட்ட செயலாளருக்கு பொறுப்புக் கூறும் விதத்தில் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. இடர் முகாமைத்துவம் தொடர்பான குறுகிய பயிற்சியொன்றின் பின்னர் முப்படைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை என்பவற்றிலிருந்து விடுவிக்கப்பட்ட அதிகாரிளினாலும் ஏனைய தர உத்தியோகத்தினரினாலும் இதற்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிப்தற்காக அதன் பிரதான பிரிவுகளான இடர் குறைப்பு மற்றும் தொழிநுட்பம், அவசரகால நடவடிக்கைகள், பயிற்சி மற்றும் அறிவூட்டல், முன்னாயத்தம் மற்றும் பதில் நடவடிக்கை திட்டமிடல், முன்னறிவிப்பு மற்றும் பரிபாலனம் மற்றும் நிதி போன்றவற்றிற்கான வெற்றிடங்களை நிரப்புவது அவசியமாயிற்று.

**தூர நோக்கு**

இலங்கையில் பாதுகாப்பான சமூகங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி

**பணி**

இயற்கை, தொழிநுட்ப மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்த அபாயங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம், சமூகங்களிடையேயும், மொத்தமாக தேசிய மட்டத்திலும் பாதுகாப்புக் கலாசாரத்தை உருவாக்குதலும்

பிரிவு 2

## 2. <u>இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் தொடர்பான சுருக்கமான விளக்கம்</u>

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | மேஜர் ஜெனரால் காமினி ஹெட்டியாரச்சி<br>*எம் எஸ் சி ஆங்கிலம் மற்றும் முகாமைத்துவம் (சபரகமுவ)*<br>*மனித வள முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா (என் ஐ பி எம்)*<br>*மைக்ரோசெப்ட் எக்ஸ் பி 2002 மற்றும் கிரபிக் டிசைனிங் சான்றிதழ்* |

## 3.1 இடர் முகாமைத்துவ நிலையத்தின் தேசிய மன்றம்

| | |
|---|---|
| தலைவர் | அதிமேதகு ஜனாதிபதி, சந்திரிகா பண்டாரநாயக குமாரணதுங்க அவர்கள் |
| உப தலைவர் | கௌரவ பிரதம மந்திரி, மகிந்த ராஜபக்ச அவர்கள் |
| எதிர்க் கட்சித் தலைவர் | கௌரவ ரணில் விக்ரமசிங்ஹ அவர்கள் |

**பின்வரும் பிடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள்**

| | |
|---|---|
| சமூக நலனோம்பு | கௌரவ அமைச்சர் சுமேதா ஜி ஜயசேன அவர்கள் |
| புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு | |
| சுற்றாடல் | கௌரவ அமைச்சர் ஏ எச் எம் பவுசி அவர்கள் |
| வீட்டு விடயங்கள் | கௌரவ அமைச்சர் அமரசிரி தொடங்கொட அவர்கள் |
| சுகாதாரம் | கௌரவ அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா அவர்கள் |
| விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | கௌரவ அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்கள் |
| வீடமைப்பு | கௌரவ அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்கள் |
| கடலோர பாதுகாப்பு | |
| நீர்ப்பாசனம் | கௌரவ அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்கள |
| மின் வலு | கௌரவ அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அவர்கள் |
| பாதுகாப்பு | கௌரவ அமைச்சர் இரத்னசிரி விக்ரமநாயக அவர்கள் |
| பொலிஸ் | கௌரவ அமைச்சர் இரத்னசிரி விக்ரமநாயக அவர்கள் |
| நிதி | கௌரவ அமைச்சர் சரத் அமுனுகம அவர்கள் |
| காணி | கௌரவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அவர்கள் |
| மீன்பிடி மற்றும் கடல்வளம் | கௌரவ அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ அவர்கள் |
| வெளிவிவகாரம் | கௌரவ அமைச்சர் அனுர பண்டாரநாயக அவர்கள் |
| நீர் விநியோகம் | கௌரவ அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்கள் |
| பெருந்தெருக்கள் | கௌரவ பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ச அவர்கள் |
| நகர அபிவிருத்தி | கௌரவ அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்கள் |
| கல்வி | கௌரவ அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் |

பிரவு 3

## 3. பணிப்பாளர் நாயகத்தின் முன்னேற்ற அறிக்கை

2005ம் ஆண்டு 13ம் இலக்க பேரழிவு செயலாட்சிச் சட்டத்திற்கமைய உருவாக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றம் தெடர்ச்சியான நிலைப்பாடொன்றையும் பொது முத்திரையையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

### தேசிய மன்றத்தின் உள்ளடக்கம்




2005ம் ஆண்டின் 13ம் இலக்க இலங்கை பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின் பிரிவு 8ற் கமைய, இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றத்தின் கீழ் இடர் முகாமைத்தவ நிலையம் உருவாக்கப்பட்டு 2005 ஆகஸ்ட் 1ம் திகதி பணியை ஆரம்பித்தது.

### 3.2 <u>இடர் முகாமைத்துவ நிலையத்தின் கட்டமைப்பு</u>



## 3.3 ஊழியர்களை சேர்த்துக்கொள்ளல்

இடர் முகாமைத்தவ நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உபதேசகர்களின் உதவியுடன் ஊழியர்களை சேர்த்துக் கொள்வதற்கான திட்டம், வெற்றிடங்கள், சம்பளம் மற்றம் நிறுவனக் கட்டமைப்பு என்பன உருவாக்கப்பட்டது.

2005.09.14 ல் கூடிய கெபிணற் அமைச்சர்களின் கூட்டத்தில் இடர் முகாமைத்துவ நிலையத்தின் நிறுவன கட்டமைப்பும் வெற்றிடங்களும், இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றத்தின் பிந்திய அனுமதியின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2005.10.12 ல் நடைபெற்ற தேசிய மன்றக் கூட்டத்தில் மேற்படி தீர்மானமும் உரிய அதிகார நிறுவனங்களினால் அனுமதியளிக்கும் வரை சம்பள அளவுகளும் அனுமதிக்கப்பட்டது.

சில மாற்றங்களுடன், இடர் முகாமைத்துவத்திற்கான வெற்றிடங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினாலும், அதன் சம்பள அளவுகள் நிர்வாக சேவைகளுக்கான தேசிய மன்றத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில் இடர் முகாமைத்துவ நிலையம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்பட்ட 16 வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

## 3.4 மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவை உருவாக்குதல்

ஆரம்பத்தில், ஒன்பது மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவுகளை கொழும்பு, கம்பஹா, கழுத்துறை, காலி, மாத்றை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உருவாக்கப்பட்டது. இதற்காக இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் அதிரடிப்படை அதிகாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இப்பிரிவிற்காக இராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனைய தர உத்தியோகத்தினர் 222 பேர் வெளிவிடப்பட்டுள்ளதோடு சிரேஷ்ட அதிகாரிகள் மாவட்ட இணைப்பாளர்களாகவும் இடர் முகாமைத்துவத்தில் அவர்களுக்கு உதவியளிப்பதற்கு, கனிஷ்ட அதிகாரிகள் 15 பேர் அவரின் உதவியாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சிரேஷ்ட ஊழியர்களை, மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பாளர்களை, மாவட்ட இடர் முகாமைத்துவ உதவி இணைப்பாளர்களை மற்றும் ஏனைய உதவி

ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் இடர் முகாமைத்துவ நிலையத்தினால் கோரப்பட்டன.

**<u>மாவட்ட நிறுவனத்தின் கட்டமைப்பு</u>**




## 3.4 <u>இடர் முகாமைத்தவ நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட, நடைமுறையிலுள்ள செயற்பாடுகள்</u>

**தேசிய மட்டத்தில்.**

- கொழும்பு, கம்பஹா, புத்தளம், கழுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றிற்கான பயிற்சிப்பட்டறைகள் இடம் பெற்றன.

- பாதுகாப்பான இலங்கையொன்றை நோக்கிய இடர் முகாமைத்துவம் தொடர்பான 2005 முதல் 2015 வரையிலான பத்து வருட திட்டமொன்று உருவாக்கப்பட்டது. Roadmap for a safer Sri Lanka ல் குறுகிய கால மற்றும் நீண்ட கால செயற்திட்டங்கள் 100 அளவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 3.6 இடர் முகாமைத்துவ நிலையத்தின் பங்காளிகள்




### 3.7 <u>உள்ளூர் மட்ட செயற்பாடுகள்</u>

புத்தளம், கம்பஹா, கொழும்பு, கழுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- மாவட்ட இடர் முகாமைத்துவ கமிட்டிகளை உருவாக்குதல்.
- பிரதேச மட்டத்தில் இடர் முகாமைத்துவ கமிட்டிகைள அமைத்தல்.

# இடர் முகாமைத்துவ நிலையம்

**2005.12.31 ல் முடிவடைந்த கணக்காண்டிற்கான வரவு செலவு அறிக்கை**

**2005.12. 31ற்கான ஐந்தொகை**

| | | ரூபா சதம் | ரூபா சதம் |
|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | | | |
| காரியாலய உபகரணங்கள் | Sch 1 | 5,998,880.24 | |
| தளபாடங்கள் | Sch 2 | 478,804.70 | |
| | | | 6,477,684.94 |
| வருமானத்திற்கு மேலான மேலதிக செலவுகள் | | | 1,716,744.00 |
| மொத்தம் | | | **8,194,428.94** |
| மூலதனம் | | | |
| திரைசேரியின் மூலதன நிதி | | 645,404.70 | |
| நன்கொடைகள் | Sch 3 | 5,832,280.24 | |
| | | | 6,477,684.94 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| சேர்மானச் செலவுகள் | Sch 4 | | 1,716,744.00 |
| மொத்தம் | | | **8,194,428.94** |

**பணிப்பாளர் நாயகம்**
**இடர் முகாமைத்துவ நிலையம்**

**பதில் பணிப்பாளர் -நிதி**

# 2005. 12 31ல் முடிவடைந்த கணக்காண்டிற்கான கணக்கறிக்கை

**31 டிசம்பர் 2005 ற்கான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான அறிக்கை**

| | | |
|---|---|---|
| **வருமானம்** | | |
| | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
| நடைமுறைச் செலவுகளுக்கான அரச நிதி | | 4,342,517.53 |
| **செலவுகள்** | | |
| தனிநபர் செலவுகள் | | |
| ஆதாரச் செலவுகள் | 4,223,520.00 | |
| பொருட்கள் வழங்கல் | 68,587.50 | |
| வாடகை சேவைகள் | 1,657,060.53 | |
| ஏளைய சேர்த்துக்கொள்ளல் செலவுகள் | 110,093.50 | |
| **மொத்த நடைமுறைச் செலவுகள்** | | 6,059,261.53 |
| **வருமானத்திலும் மீறிய செலவுகள்** | | (1,716,744.00) |

# இடர் முகாமைத்துவ நிலையம்

**2005ம் ஆண்டிற்கான நிதிக் கூற்று**

**டிசம்பர் 2005 வரையிலான நிதி மாற்றங்கள் தொடர்பான விபரம்**

| **உள்வரவுகள்** | ரூபா சதம் | **வெளிச் செல்லல்கள்** | ரூபா சதம் | |
|---|---|---|---|---|
| திரைசேரி நிதி | 5,000,000.00 | **நடைமுறைச் செயற்பாடுகள்** | | |
| ஜனாதிபதி செயலக மாற்றீடுகள் | 12,077.77 | | | |
| | | நிதித் கொடுப்பனவுகள் | 2,915,840.00 | |
| | | வழுங்கல்கள் | 68,587.50 | |
| | | வாடகை சேவைகள் | 1,247,996.53 | |
| | | ஏனைய நடைமுறைச் செலவுகள் | 110,093.50 | |
| | | | | 4,342,517.53 |
| | | **முதலீட்டு நடவடிக்கைகள்** | | |
| | | காரியாலய உபகரணங்கள் | 166,600.00 | |
| | | தளபாடங்கள் மற்றும் இணைப்புக்க | 478,804.70 | |
| | | | | 645,404.70 |
| | 4,987,922.23 | | | 4,987,922.23 |

# இடர் முகாமைத்துவ நிலையம்

**2005ம் ஆண்டில் முடிவடைந்த நிதயாண்டிற்கான நிதிக் கூற்று**

**31.12 2005 ற்கான மீதி**

| | | பதிவு இல | ரூபா சதம் | Dr ரூபா | Cr ரூபா |
|---|---|---|---|---|---|
| 2301 | நடைமுறை நிதி | 44 | | | 4,342,517.53 |
| 2301 | மூலதன நிதி | 35 | | | 645,404.70 |
| 2301 | சேர்ந்த செலவுகள் | 27 | | | 1,716,744.00 |
| 2302 | காரியாலய தளபாடங்கள் | 38 | | 5,998,880.24 | |
| | **வாடகை சேவைகள்** | | | | |
| 1402 | தொலைத்தொடர்பு | 10 | 79,815.53 | | |
| 1403 | தபால் செலவுகள் | 16 | 770.00 | | |
| 1408 | வாடகை செலவுகள் | 14 | 890,725.00 | | |
| 1407 | பதிப்பித்தல் மற்றும் விளம்பரம் | 12 | 685,750.00 | | |
| | | | | 1,657,060.53 | |
| | **வழங்கல்கள்** | | | | |
| 1201 | காகிதாதிகள் காரியாலய தேவைகள் | 6 | 66,613.50 | | |
| 1207 | ஏனைய வழங்கல்கள் | 8 | 1,974.00 | 68,587.50 | |
| | **ஏனைய நடைமுறைச் செலவுகள்** | | | | |
| 1905 | விசேட சேவைகள் | 18 | 86,000.00 | | |
| 1905 | தொழிநுட்ப மற்றும் ஏனைய செல | 20 | 850.00 | | |
| 1905 | கழியாட்டச் செலவுகள் | 22 | 23,243.50 | 110,093.50 | |
| | **தனிப்பட்ட செலவுகள்** | | | | |
| | நிதி வழங்கல்கள் | | | | |
| 1003 | தலைமைக் காரியாலயம் | 2 | 350,000.00 | | |
| 1003 | மாவட்ட செயலாளர்கள் | 4 | 3,873,520.00 | | |
| | | | | 4,223,520.00 | |
| 2301 | நன்கொடைகள் | 41 | | | 5,832,280.24 |
| 2302 | காரியாலய உபகரணங்கள் | 36 | | 478,804.70 | |
| | மொத்தம் | | | **12,536,946.47** | **12,536,946.47** |

# <u>இடர் முகாமைத்துவ நிலையம்</u>

## <u>2005ம் ஆண்டிற்கான நிதிக் கூற்று</u>

### 31.12.2005 ல் காரியாலய உபகரணங்கள்

அட்டவணை 1

| விபரம் | அளவு | கூறு விலை | ரூபா சதம் | பெருமதி ரூபா சதம் |
|---|---|---|---|---|
| **<u>கணனி மற்றும் உதிரிப்பாகங்கள்</u>** | | | | |
| புரஜெக்டர் | 2 | 103,160.00 | 206,320.20 | |
| எச் பி லேசர் ஜெட் பிரின்டர் | 24 | 243,154.00 | 486,308.50 | |
| யு எஸ பி | 32 | 3,584.00 | 114,685.21 | |
| எச் பி கையடக்க கணனிகள் | 8 | 168,463.00 | 1,347,704.35 | |
| ஐ பி எம் ஏ 51 கணனிகள் | 32 | 108,118.00 | 3,459,761.98 | 5,614,780.24 |
| பெக்ஸ் இயந்திரம் | 15 | | | 217,500.00 |
| | | | | 5,832,280.00[1] |
| பெட்டகை | 1 | | 19,750.00 | |
| கணனி மோடம் | 1 | | 2,850.00 | |
| | | | | 22,600.00 |
| தொலைபேசி - சன்டெல் | 10 | 7,500.00 | 75,000.00 | |
| - ரெலிகொம் | 3 | 23,000.00 | 69,000.00 | |
| | | | | 144,000.00 |
| மொத்தப் பெருமதி | | | | **5,998,880.24** |

[1] ஐ நா அபிவிருத்தித் திட்ட நன்கொடை

# இடர் முகாமைத்துவ நிலையம்

2005ம் ஆண்டிற்கான நிதிக் கூற்று

**31.12.2005 ல் தளபாடங்களும் இணைப்புக்களும்**

**2006**

| விபரம் | அளவு | 2006 இணைப்பு | பெருமதி |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா சதம் |
| எழுதும் மேசை | 4 | 31,342.50 | 81,466.00 |
| உயர் நாற்காலி | 4 | | 34,776.00 |
| எழுதும் மேசை | 3 | | 49,093.50 |
| கணனி மேசை | 2 | 31,896.00 | 15,237.50 |
| எழுதும் மேசை | 4 | | 60,651.00 |
| கணனி மேசை | 2 | | 7,107.00 |
| பைல் கெபினற் | 1 | 63,720.00 | 9,625.50 |
| தகர கெபினற் | **2** | | 19,055.50 |
| | | **126,958.50** | **277,012.00** |
| நானவித தாங்கி | 1 | 345.70 | 345.70 |
| காரியாலய கண்ணாடி மேசை | 1 | 6,588.00 | 6,588.00 |
| சோபா செட் | 1 | 48,069.00 | 48,069.00 |
| பெப்ரிக் கை நாற்காலி | 8 | 3,125.00 | 22,500.00 |
| நாற்காலி | 7 | 7,500.00 | 47,250.00 |
| பின்புற நாற்காலி | 3 | 5,145.00 | 13,891.50 |
| எல் பி சிறிய மேசை | 3 | 8,865.00 | 23,935.50 |
| அசையும் கபினட் | 3 | 6,190.00 | 16,713.00 |
| பெப்ரிக் கை கதிரை | 8 | 3,125.00 | 22,500.00 |
| | | | 201,792.70 |
| | | | **478,804.70** |

# இடர் முகாமைத்துவ நிலையம்

## நிதிக் கூற்று 2005

## 31.12.2005 ல் நன்கொடைகள்

அட்டவணை 3

| நன்கொடை நிறுவனம் | அளவு | விபரம் | கூற்று விலை | பெருமதி |
|---|---|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் | 8 | எச் பி கையடக்க கணனி | 168,463.04 | 1,347,704.32 |
| | 2 | எச் பி புரஜெக்டலர் | 103,160.10 | 206,320.20 |
| | 32 | யு பி எஸ் | 3,583.91 | 114,685.12 |
| | 32 | ஐ பி எம் ஏ51 கணனிகள் | 108,117.56 | 3,459,761.92 |
| | 24 | எச் பி லேசர் ஜெட் பிரிண்டர் | 20,262.85 | 486,308.40 |
| | 15 | பெக்ஸ் இயந்திரம் | 14,500.00 | 217,500.00 |
| | | | | 5,832,279.96 |

# இடர் முகாமைத்துவ நிலையம்

## நிதிக் கூற்று 2005

## 31.12.2005 ல் மொத்தச் செலவுகள்

| 2005 டிசம்பர் மாதத்திற்கான வாகன வாடகைச் செலவு | வவுசா இல. | **பெருமதி** |
|---|---|---|
| | | ரூபா சதம் |
| | 29 | 48,000.00 |
| | 32 | 55,000.00 |
| | 34 | 35,484.00 |
| | 37 | 55,000.00 |
| | 38 | 17,742.00 |
| | 41 | 48,000.00 |
| | 42 | 45,000.00 |
| | 43 | 7,258.00 |
| | 45 | 30,161.00 |
| | 49 | 40,806.00 |
| | 50 | 26,613.00 |
| | | 409,064.00 |
| மாவட்ட இணைப்பாளர்களுக்கான கொடுப்பனவு | | 1,307,680.00 |
| | | 1,716,744.00 |

## இடர் முகாமைத்துவ நிலையம்
வெளிப்படையான கணக்கு கொள்கைகள்
**31 டிசம்பர் 2005**

**1. கணக்குப் பதிவுகளின் அடிப்படைகள்**

இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் கணக்குப் பதிவு மேற்கொள்தலின் தர நிர்ணயத்தினடிப்படையில், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கொள்கைகளை மையமாக வைத்து வரலாற்று ரீதியிலான செலவின்ங்களை கொண்ட இந்நதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட திகதியிலுள்ள நிதி நிலைமைகளுக்கமைய சொத்துக்களும் பொறுப்புக்களும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**2. பற்றுச்சீட்டுக்கள்**

பொதுத் திரைசேரியில் இருந்து பெறப்பட்ட எல்லா நிதிகளுக்கும் கணக்குப் பதிவு புத்தகத்திற்கமைய சொத்துக்கள் மற்றும் நடைமுறை செலவுகள் அடையாளம் காணப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**3. சொத்துக்களுக்கான பெருமதி மதிப்பீடு**

எல்லா சொத்துக்களும் கொள்விலையில் பதியப்பட்டுள்ளது.

**4. நன்கொடைகள்**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் கிடைக்கப்பெற்ற எல்லா காரியாலய உபகரணங்களும் கொள்விலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**5. தேய்மானங்கள்**

கொள்கையடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்கான தேய்மானம் கணிப்பிடப்படவில்லை, வெளியேற்றப்படும் ஆண்டிற்கான தேய்மானமே கணிப்பிடப்பட்டுள்ளது.

செயளாளர்
இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு

**<u>இடர் முகாமைத்துவ நிலையத்தின் 2005 ஆடி, 12 இலிருந்து மார்கழி, 31இல் முடிவுற்ற தவணைக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சி) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை</u>**

இலங்கை இடர் முகாமைத்துவ நிலையத்தின் 2005 ஆடி, 12 இலிருந்து மார்கழி, 31இல் முடிவுற்ற தவணைக்கான கணக்குகள் மீதான கணக்காய்வானது 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இடர் முகாமைத்துவ சட்டத்தின் 18ஆம் பிரிவும் மற்றும் 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) உடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் நான் கருதும் அவதானங்கள் நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (c) பிரிவின் பிரகாரம், நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டும். நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (a) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை இணைப்பாக வழங்கப்படும்.

1.2 **<u>கணக்காய்வின் நோக்கெல்லை</u>**

இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் எனபன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுகளின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பனவற்றின அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வையினதும் நோக்கெல்லையும், பரப்பும், என்னால்ப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம், என்பனவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது.

நிதிக் கூற்றுக்கள் பொறுண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத் தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமனங்கள், முறைகள்,

நடைமுறைகள் என்பனவற்றிக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற் கான சான்றுகளின் பரிசோதனை கணக்கீட்டுத் தத்துவங்களையும் , குறிப்பிடப் தக்க மதிப்பீடுகளையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஓட்டு மொத்த வெளிம்மடுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்ளைகள் பொருத்தமானதாகவும், மாற்றமின்றிப் பிரயோகித்தும், போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதை நிர்ணயித்தல் போன்றவற்றிற்கான கணக்காய்வு உள்ளடக்கி உள்ளது. 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும், பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினைக் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குகின்றன.

## 1.3 இடர் முகாமைத்துவ நிலையத்தை ஸ்தாபித்தல்

**அ)** 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இடர் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு (1) இன் பிரகாரம் சம்பந்தப்பட்ட கௌரவ அமைச்சரால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் படி முடிவு செய்யப்பட்ட திகதியில் நடைமுறை நிறைவேற்றப்பட்டது.

**ஆ)** **"இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மனறம்"** என்று அழைக்கப்படும் ஒரு சபை மேற்கூறிய சட்டத்தின பிரிவு 2(1) இன் பிரகாரம் அமைக்கப்பட்டது. அத் தேசிய சபையில் அதிமேதகு ஜனாதிபதி (தலைவர்), பிரதம மந்திரி, எதிரிக்கட்சித்தலைவர், 20 அமைச்சர்கள், மாகாண சபை முதலமைச்சர்கள், மற்றும் 05 தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்குவர்.

தேசிய சபையின் முதலாவது கூட்டம் 2005 ஐப்பசி 12 ஆம. திகதி நடைபெற்றது.

## 1.4 இடர் முகாமைத்துவ நிலையத்தின் கடமைகள்

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு (1) இன் பிரகாரம் இடர் முகாமைத்துவ நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் கடமைகள் பின்வருமாறு:

**(அ)** தேசிய இடர் முகாமைத்துவத்திற்கான திட்டமும், அவசர நடவடிக்கைக்கான திட்டமும் தயாரிக்க உதவுதல்.

(ஆ) அவசர நடவடிக்கைகளினதும், முகாமைத்துவ திட்டங்களினதும் பொறுப்புக்களை ஏற்றலும், நடவடிக்கைகளை நிறைவேற்றலும், ஒருங்கிணைத்தலும்.

(இ) ஏனைய அரச நிறுவனங்களின் இடர் முகாமைத்துவ திட்டங்கள் பிரதான திட்டங்களுடன் ஒத்திருப்பதை உறுதிப்படுத்தல்.

(ஈ) ஏனைய அரச நிறுவனங்கள் மேற் கொள்ளும் இடர் முகாமைத்துவ திட்டங்களை ஒழுங்குபடுத்தலும், நிதி உதவிகளை விஸ்தரித்தலும்

(உ) இடர் முகாமைத்துவ வேலைகள் தொடர்பான நிறுவனங்களுடனும், ஸ்தாபனங்களுடனும் ஒருங்கிணைப்பும் மற்றும் அறிவுரைகளும் வழங்குதல்

(ஊ) இடர் முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட தரவுகளை ஆய்விற்கும், அபிவிருத்திக்கும் ஆக சேகரித்தலும் பராமரித்தலும்

(எ) நிறுவனத்தின் வேலைகள் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை மன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

## 1.5 கணக்காய்வின் provisioṅ

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இடர் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு (2) இன் பிரகாரம் " **இடர் முகாமைத்துவ நிலையத்திற்கான தேசிய மன்றம்"** என்று அழைக்கப்படும் ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. பிரிவு 17 இன் பிரகாரம் தேசிய மன்றத்திற்கான இறுதி நிர்மாணம் செய்யப்படல் வேண்டும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

**நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பணம்**

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 8 இன் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட நிறுவனத்தின் வருமானம், செலவீனம், சொத்துக்கள், கொடுக்கப்படவேண்டிய கணக்குகள், மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கணக்கீட்டுப் புத்தகங்கள், பணிப்பாளர் நாயகத்தினாலும், பிரதிப் பணிப்பாளர் (நிதி) யினாலும் பராமரிக்கப்பட்டு அவர்களின் கையொப்பத்துடன் நிதிக்கூற்றுக்கள் கையளிக்கப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன.

**அ)** இந் நிறுவனத்தின் நிதிக்கூற்று சமர்ப்பித்தல் தொடர்பான சட்டபூர்வம் பற்றி வினவியபோது இடர் முகாமைத்துவ செயளாளர் எனக்கு பின்வருமாறு அறிவித்தார்: அதாவது இடர் முகாமைத்துவ செயற்பர்டுகள் சட்டரீதியானது ஏனெனில் 2005/ 2006 ஆம் வருடங்களுக்கான இடர் முகாமைத்துவ நிறுவனத்தின் கட்டமைப்பு, பணிப்பாளர் நாயகத்தின் பதவி நியமனம், 2006 ஆம் ஆண்டுக்கான செயற் திட்டங்கள் போன்றவை இடர் முகாமைத்துவ தேசிய மன்றத்தினால் அதன் முதலாவது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

ஆ 2006 மாசி 20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்று மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கான நிலையம் என்பனவற்றின் விடயங்கள், செயற்பாடுகள் இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

இ) இடர் முகாமைத்துவ நிலயத்தின் காரியங்களுக்கான அரச நன்கொடைகள் செலவீன தலைப்பின் கீழ் வழங்கப்பட்டதாக அமைச்சு கூறியது.

ஈ) இலங்கை இடர் முகாமைத்துவ சட்ட மூலத்தின் 17ஆம் பிரிவின்படி தேசிய மன்றத்திற்கான நிதி ஸ்தாபிக்கப்படவில்லையாதலால் அந்நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் ஆய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

உ) தேசிய மன்றத்தின் கரும நடவடிக்கைகளுக்காக பிரதம நிறைவேற்று அதிகாரி நியமிக்கப்படவில்லை. அதற்கேற்ப, அமைச்சு செயளாளரே இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதம கணக்கியல் அதிகாரியாக செயற்பட்டார்.

## 2. கணக்காய்வு அபிப்பிராயம்:

நான் கருதுவதாவது, எனது ஆய்வின் மூலம் தென்படுவதுவும், எனக்கு கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பெற்ற விளக்கங்களுக்கும் அமைய இலங்கை கணக்கீட்டு நியமனங்களும் நீதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கும் அத்துடன் கணக்குகளுக்கான குறிப்புகளுக்கும் அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.இவ் அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் பற்றிய பந்தி 2:3 இல் நிதிக்கூற்றுக்களுக்கு காட்டப்பட்ட தாக்கத்தை விளையும் விடயங்களைத்தவிர, 2005 ஆடி 12 க்கும் 2005 மார்கழி 12 இக்கும் இடைப்பட்ட காலத்திற்கான கணக்குகளின் தரங்கள பற்றி 1 இலிருந்து 4 வரையான அட்டவணைகளில் குறிப்பிட்டவாறு இடர் முகாமைத்துவ நிலயத்தின் கணக்குப் புத்தகங்கள், முறையாக வைத்திருந்தது என்றும் அதன் மூலம் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளிலும், காசுப்பாச்சலினதும் உண்மையானதுவும், நேர்மையானதுவுமான தோற்றம் புலப்படுகிறது என்பது எனது அபிப்பிராயம்.

## கணக்குகள் மீதான கருத்துரைகள்

### 2.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ் காணும் கணக்குகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் மீதான போதுமான சான்றுகள் இல்லாமையினாலும் அவற்றிக்கு எதிராக போதியளவு சான்றுகள் குறிப்பிடப்படாமையினாலும் திருப்தியான உறுதி வழங்கப்பட முடியவில்லை.

| சம்பந்தப்பட்ட விடய கணககு | | தொகை | சான்றுகளும் வினயோகமும |
|---|---|---|---|
| அ) | நிறுவனத்திற்கு இரண்டாம்நிலை சேவை அடிப்படையில் தொழில்புரியும சேவை அதிகாரிகளின் கொடுப்பனவு | ரூ.4,155,520 | 1. நிர்வாகப் பணஉதவிக்கான கொடுப்பனவிற்கு தேசிய் மன்றத்தின் அங்கீகாரம்<br>11 முகாமைத்துவ சேவை திணைக்களதின் அங்கீகாரம்<br>111. நியமனக் கடிதங்களும, கடமைகள் பற்றிய பட்டியல. |
| ஆ) | காரியாலய கருவிகள, தளபாடங்கள், மற்றும் பொருத்துக்கள் | ரூ.5,998,880<br>ரூ. 478,805 | மதிப்பீட்டு வாரியத்தின் அறிக்கை |

### 2.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கீழ் குறிப்பிடப்பட்ட சட்டஙகளுக்கும் விதிகளுக்கும் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களரு மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமை |
|---|---|
| அ) 1) திறைசேரி சுற்றறிக்கைகள் 1978 ஆம் ஆண்டு மார்கழி 19 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 842 | ஓா நிலையான சொத்துப்பதிவேடு நிர்வகிக்கப்படவேண்டும். ஆயினும் 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான செலவு ரூபா 6,477,685/= இச் சொத்து பதியப்படவில்லை. |
| 2) 2002 ஆம் ஆண்டு காாததிங்க 19 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 1ஏ1/ 2002/02 | கணணிகள் அதன் உதிரிப்பாகங்கள் சம்பந்தமாக நிலையான சொததுப் பதிவேடு நிர்வகிக்கப்படவில்லை. |
| **ஆ)** இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதியியல் | |

பிரமாணங்களின் தொகுப்பு:

| | |
|---|---|
| 1. 7 ஆா.395 (சி) | வங்கிக்கணக்கின் ஒருமைப்படுத்தும் கூற்றின் பிரதி கணக்காளர் நாயகத்திற்கு சமர்ப்பிகப்பட வில்லை |
| 2. 7 ஆர் 135 | நிர்வாகம் மற்றும் நிதி விவகாரங்களுக்கான அதிகாரம் வழங்கப்படவில்லை. |
| 3. எவ் ஆா 756 & 757 | வருடாந்த மதிப்பீட்டு வாரியம் நடை பெறவில்லை |

**3. <u>நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு</u>**

3.1 **<u>நிதி வினைவுகள்:</u>**

2005 ஆடி 12 ஆம் திகதியிலிருந்து 2005 மார்கழி 31 வரைக்குமான திரைச்சேரி மானியமான 5மில்லியனில் ரூபா 4,342,517/= செலவு செய்யப்பட்டு, மொத்த செலவீனம், சேர்த்துக கொளளப்பட்ட செலவீனம் அடங்கலாக ரூபா 6,059,261/= அத்துடன் பற்றாக்குறை ரூபா 1,716,744/= அவதானிக்கப்பட்டது.

**3.2 <u>சபையின் நிதியம்:</u>**

இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 17 இன் பிரகாரம் ரூபா 10 மில்லியன் ஆரம்ப மூலதனமாக திரட்டு நிதியிலிருந்து பெறப்பட்டு ஓர் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு இருக்க வேண்டும். இது நடைபெறவில்லை.

**3.3 <u>செயற்பாடுகளின் நிறைவேற்றம்</u>**

அவதானிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(அ) **இலங்கை இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றத்தின் ஒருங்கிணைப்பின்மை:**

இடர் முகாமைத்துவத் திட்டங்களையும் மற்றும் அவசர நடவடிக்கைத்திட்டங்களையும் வரைதலும் அத்துடன் இடர் முகாமைத்துவத் திட்டங்களையும் மற்றும் அவசர நடவடிக்கைத்

திட்டங்களையும் ஒருங்கிணைத்து, அமுலாக்கவும் இடர் முகாமைத்துவ தேசிய மன்றத்திற்கு ஒத்தாசை வழங்கும் முக்கிய குறிக்கோளுடனேயே 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 8இன் பிரகாரம் நிறுவப்பட்டதாயினும் இடர் முகாமைத்துவத்திற்கான மன்றம் கணக்காய்வு தொடக்கத்திலிருந்து முடிவு வரையான காலவரையின் மீளாய்வின் போது ஒரு தடவை மாத்திரமே கூடியுள்ளதை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் நிறுவனத்திடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஒருங்கிணைப்பு பூர்த்தி செய்யயப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. இடர் முகாமைத்துவத் தேசிய மன்றத்திற்கான செயளாளர் நியமிக்கப்படவில்லை.

ஆ) **வேலைகள் நிறைவேற்றம்**

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 8இன் கீழ் இடர் முகாமைத்துவ நிலயத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வேலைகளின் நிறைவேற்றம் பற்றிய உறுதிப்படுத்தும் தகவல்கள் மீளாய்வின் போது அறிவிக்கப்படவில்லை.

இ) **ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல்.**

நிதி திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ சேவை திணை களத்தின் DMS/PS/16 இலக்க 2005ஐப்பசி06 திகதிய கடிதத் தினால் இடர் முகாமைத்துவ நிலையத்திற்கு 1888 அங்கீகரிக் கப்பட்டார்களாயினும் 2005ஆம் ஆண்டு மார்கழி 31 ஆம் திகதி வரை 19 உத்தியோகத்தர்கள் நிலயத்தின் சேவைக்காகச் சேர்த் துக்கொள்ளப்பட்டார்கள். அவ்வாறு சேவையில் அமர்த்தப்பட்டவர் களும் ஒப்பந்த அடிப்படையிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்

ஈ **நிதி நிர்வாகம், நிர்வாகம்,மற்றும் நிலயத்தன் மேற்பார்வை**

நிதி நிர்வாகம், நிர்வாகம்,மற்றும் நிலயத்தன் மேற்பார்வை இவைகள் அனைத்தும் தேசிய மன்றத்திற்குக் கீழ் வருகின்ற போதும் தேசிய மன்றம் பணிக்கப்பட்டபடி கூட்டம் கூடவும் இல்லை அல்லது செயளாளரை நியமிக்கவும் இல்லை.

## 4. முறமைகளும் கட்டுப்பர்டுகளும்

கணக்காயவின் போது முறமைகளும் கட்டுப்பர்டுகளும் தொடர்பாக அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் இடர் முகாமைத்துவ நிலயத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவரது கவனத்திற்கு கொணடுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

கீழ்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகளுக்கு விசேட கவனம் செலுத்த பணிக்கப்பட்டது

அ) நிதி

ஆ) சொத்துக்கள்

இ) வங்கி கணக்கு இணக்கக் கூற்று

ஈ) இருப்பு

உ) பறறுச்சீட்டு வழங்கல்

ஊ) வாகனப் பாவனை

பி எ பேமதிலக
கணக்காய்வாளர் நாயகம்